சுருக்கம்

நல வாரியங்கள்–தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம்–2007–2008–ஆம் ஆண்டு ரூ.4,00,000/–செலவில் 200 தொழிலாளர்களுக்கு இலவச சலவைப்பெட்டி வழங்குதல்–ஆணை வெளியிடப்படுகிறது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை

அரசு ஆணை (டி) எண்.415 நாள் 1/6/2007

படிக்க:–

1. தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியச் செயலர் கடிதம் எண். 703/LAWA/நாள் 27.03.2007.
2. தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண்.டி1/16123/07 நாள் 29/3/07

ஆணை

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியச் செயலர், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம் 1.9.2006 முதல் செயல்பட்டு வருகிறது என்றும், அவ்வாரியத்தின் மூலம் பொதுவான நல உதவிகளான கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவி, இயற்கை மரண உதவி, விபத்து மரண உதவி, கண் கண்ணாடி வாங்கிட உதவி மற்றும் ஓய்வூதியம் வழங்குவது போன்ற உதவிகள் வழங்கப்படுகின்றன என்றும் தற்போது இந்த வாரியத்தில் பதிவு செய்துள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய வருவாயைப் பெருக்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்காக அவர்களது தொழிலுக்கு உதவியாக இலவசமாக சலவைப் பெட்டிகளை (Iron Box) வழங்கினால் அவர்கள் வாழ்க்கை முன்னேற்றமடையும் என்றும், மேற்குறிப்பிட்ட இலவச சலவைப் பெட்டியை, ஒரு பெட்டியின் விலை ரூ.2000/– என்ற வீதத்தில், பதிவு பெற்ற தொழிலாளர்கள் 200 நபர்களுக்கு வழங்கினால் ரூ.4,00,000/– செலவு ஆகும் என்றும், அத்தொகையை அரசு மானியமாக வழங்கலாம் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி உதவித்தொகை பெறுவதற்காக கீழ்கண்ட தகுதிகளைத் தொழிலாளர்கள் பெற்றிருத்தல் வேண்டுமென்றும் தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்நல வாரியச் செயலர் தெரிவித்துள்ளார்:–

- வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளியாக குறைந்தது ஒரு ஆண்டுக்காலம் இருக்க வேண்டும்,

/த.பி.பா/

- சலவைப் பெட்டி வழங்கும் தினத்தன்று வாரியத்தில் குறிப்பிட்ட தொழிலில் பணி புரிபவராக இருக்க வேண்டும்.

- அரசிடமிருந்து /அரசின் இதர வாரியங்களிலிருந்தோ இலவசமாக சலவைப் பெட்டி பெறாதவராகவும், ஏற்கெனவே சொந்தமாக சலவைப் பெட்டி வைத்துள்ளவராகவும் இருத்தல் கூடாது.

**2.** மேற்குறிப்பிட்ட சலவைத் தொழிலாளர் நல வாரியச் செயலாளரின் கருத்துருவை தொழிலாளர் ஆணையர் பார்வை இரண்டில் கண்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

**3.** மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சர் அவர்கள் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை மானியக் கோரிக்கையின் போது வெளியிட்ட **2007–2008**–ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளில், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு இலவச சலவைப் பெட்டி வழங்கலாம் என்றும் **2007–2008**–ஆம் ஆண்டு ரூ.**4,00,000/–** (ரூபாய் நான்கு லட்சம்) அரசு மானியத்தில் **200** தொழிலாளர்களுக்கு இலவச சலவைப்பெட்டி வழங்கலாம் என்றும் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

**4.** அதற்கிணங்க மேற்குறிப்பிட்ட கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, இலவச சலவைப் பெட்டி (Iron Box) வழங்கலாம் என்று அரசு ஆணையிடுகிறது:–

அ) வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளியாக குறைந்தது ஒரு ஆண்டுக்காலம் இருக்க வேண்டும்.

ஆ) மேற்படி சலவைப் பெட்டி வழங்கப்படுகின்ற தினத்தில் தொடர்புடைய தொழிலாளர் வாரியத்தில் அந்த பணியில் ஈடுபட்டிருப்பது உறுதி செய்த பின்னர் வழங்கப்படும்.

இ) இதற்கு முன்னர் இது போன்ற உதவி அரசிடமிருந்தோ/ அரசின் இதர வாரியங்களிலிருந்தோ இலவசமாக சலவைப் பெட்டி பெறாதவராகவும், ஏற்கெனவே சொந்தமாக சலவைப் பெட்டி வைத்துள்ளவராகவும் இருத்தல் கூடாது என்பதை உறுதி செய்த பின்னர் வழங்கப்படும்.

/த.பி.பா/

2007–08–ல் 200 தொழிலாளர்களுக்கு, ஒருசலவைப் பெட்டியின் விலை ரூ.2000/– என்ற வீதத்தில் ரூ.4,00,000/– (ரூபாய் நான்கு லட்சம்) செலவில் வழங்க அரசு ஆணையிடுகிறது. இச்செலவினத்தை, தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரிய நிதியிலிருந்து செலவழிக்க அவ்வாரியச் செயலருக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. இச் செலவினம் தொடரா செலவினம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

5. இந்த அரசாணை நிதித்துறை அ.சா.கு.எண்.34458/L&E/07 31/5/07 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஞா.சரோஜா,
அரசு இணைச் செயலாளர்

பெறுநர்

தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006
செயலர், தமிழ்நாடு முடிதிருத்தும் தொழிலாளர்நல வாரியம்,
சென்னை–600 034
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–600 035
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–600 009
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–600 005
மாநிலக் கணக்காயர், சென்னை–600 018
மாநிலக் கணக்காயர், சென்னை–600 009
<u>நகல்</u>
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
நிதித்துறை, சென்னை–600 009
மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு செயலரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்